# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
முதலாம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 1st Term Examination - 2021

FWC

| | | | |
|---|---|---|---|
| இந்து நாகரிகம் Hindu Culture | Three Hours 10 min / Gr -12 (2022) | 46 | T | I,II |

## பகுதி I

- ❖ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
- ❖ **மிகப்பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

01. உலக ஒழுங்கைப் பேணுபவனாகவும், மனிதர்களின் ஒழுக்கத்தைக் கண்காணிப்பவனாகவும் இருக்கு வேதம் குறிப்பிடும் தேவர்.
1) வருணன் 2) இந்திரன் 3) அக்கினி 4) சோமன் 5) உருத்திரன்

02. "தொன்றுதொட்டு வரும் அறிவு" என பொருள் கொள்ளப்படும் நூல்.
1) திருமந்திரம் 2) வேதம் 3) ஆம்நாயம் 2) புராணம் 5) சுபதந்திரம்

03. பாவச் செயல்கள் அதன் பிராயச்சித்தம் என்பவற்றினைக் கூறும் புராணம்.
1) ஸ்கந்த புராணம் 2) கருட புராணம் 3) கந்த புராணம்
4) அக்கினி புராணம் 5) சூரிய புராணம்

04. சுந்தர மூர்த்தி நாயனார் நின்ற மார்க்கம்.
1) தாச மார்க்கம் 2) சன் மார்க்கம் 3) சற்புத்திர மார்க்கம்
4) சக மார்க்கம் 5) கர்ம மார்க்கம்

05. சிவாலயங்களுக்குச் சொந்தமான நிலபுலங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டது.
1) திருவிடையாட்டம் 2) தேசங்கள் 3) தேவதானம்
4) சதுர்வேதி மங்கலம் 5) கிருஷ்ண மங்கலம்

06. சங்ககால பாலை நிலக் கடவுளாகப் போற்றப்பட்டவர்.
1) வருணன் 2) இந்திரன் 3) விஷ்ணு 4) கொற்றவை 5) முருகன்

07. பிற்கால சிற்பசாத்திர நூல்களுக்கு அடிப்படையாக அமைந்த நூல்.
1) வேதம் 2) ஆகமம் 3) புராணம் 4) பரிபாடல் 5) இதிகாசம்

08. திரிபுவனச் சக்கரவர்த்திகளின் சின்னமாகக் கொள்ளப்பட்டது.
1) நடராசர் 2) கருடன் 3) மயில் 4) கணபதி 5) வேல்

09. ஆரணியகம் என்பது எதனைப் பற்றிக் குறிப்பிடுகின்றது.
1) இல்லற தர்மம்
2) பிரமச்சரிய வாழ்க்கை
3) வானப்பிரஸ்தனுக்குரிய சமய அனுட்டானங்கள்
4) மாணவப் பருவ வாழ்க்கை
5) சிறப்புப்பற்றி

10. யோக நூலாகவும் பக்தி நூலாகவும் தத்துவ இலக்கியமாகவும் போற்றப்படுவது.
1) இராமாயணம் 2) திருமந்திரம் 3) மகாபாரதம்
4) பகவத் கீதை 5) வேதம்

11. பல்லவர் காலத்தில் வைதீகக் கல்வியைப் போதித்த கல்வி நிறுவனம்.
1) ஆச்சிரமங்கள் 2) குருகுலங்கள் 3) அரண்மனைகள்
4) திண்ணைப் பள்ளி 5) காஞ்சி கடிகைஸ்தானம்

12. வேள்விக் கிரியைகளுக்குரிய விதிகளைக் கூறும் நூல்.
1) பிராமணம் 2) உபநிடதம் 3) ஆரணியகம்
4) சூத்திரங்கள் 5) புராணங்கள்

13. ''மகவான், சதக்கிரது'' என்ற பெயர்களால் அழைக்கப்படும் வேத கால தெய்வம்.
1) வருணன் 2) இந்திரன் 3) அக்கினி 4) உருத்திரன் 5) சோமன்

14. மகாபாரதத்திற்கு கிருஷ்ண சந்தம் என்னும் உரையை எழுதியவர்.
1) கிருஷ்ணதேவராயர் 2) வியாசர் 3) ஆறுமுகநாவலர்
4) சானாவதிம்மர் 5) மீராபாய்

15. ''என்கடன் பணி செய்து கிடப்பதே'' என்ற சாதனைக்குரியவர்.
1) திருமூலர் 2) திருநாவுக்கரசர் 3) சேர்.பொன்.இராமநாதன்
4) ரி.கே.சிதம்பரநாத முதலியார் 5) துளசிதாசர்

❖ **16 தொடக்கம் 20 வரையுள்ள வினாக்களில் தரப்பட்டுள்ள கூற்றுக்களை வாசித்து அவற்றுக்குப் பொருத்தமானவற்றை I, II, III, IV ஆகிய நிரல்களிலிருந்து தெரிவு செய்க.**

| I | II | III | IV |
|---|---|---|---|
| **A** நந்திக்கொடி | **F** பக்திமரபு | **K** சிலாபரீட்சணம் | **P** சிவபரத்துவம் |
| **B** பிராயச்சித்தம் | **G** வியாசர் | **L** கிருஷ்ண மங்கலம் | **Q** சுயம்பு |
| **C** அறிவு | **H** ஆகமப்பிரியன் | **M** தேவரடியார் | **R** கர்ஷணம் |
| **D** அருச்சுனன் ரதம் | **I** சாத்திரங்கள் | **N** பஞ்சலட்சணங்கள் | **S** சிவபாத சேகரன் |
| **E** பழமையானது | **J** வேதவிருத்தி | **O** சதுர்மறை | **T** இராசசிம்மன் |

16. சோழர் கால ஆட்சியோடு தொடர்புடைய தொகுதி.
1) B, G, L, S 2) D, F, M, T 3) E, T, O, R 4) C, H, O, T 5) A, J, M, S

17. ஆகமங்களோடு தொடர்புடைய தொகுதி.
1) B, I, K, R 2) A, J, M, R 3) C, H, O, S 4) D, F, L, S 5) E, G, O, T

18. வேதங்களோடு தொடர்புடைய தொகுதி.
1) E, J, N, R 2) D, H, L, Q 3) C, G, O, Q 4) B, I, L, Q 5) A, J, O, S

19. பல்லவர் கால பண்பாட்டு மரபுகளோடு தொடர்புடைய தொகுதி.
1) E, G, L, T 2) D, H, L, T 3) B, J, K, Q 4) A, F, L, Q 5) C, H,N, S

20. புராணங்களோடு தொடர்புடைய தொகுதி.

1) A, I, O, P  2) B, H, O,R  3) D, F, N, P  4) E, F, N, P  5) C, H, N, P

❖ **21 தொடக்கம் 25 வரையுள்ள ஒவ்வொரு வினாவிலும் ஒரு தலைப்பின் கீழ் ஐந்து விடயங்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் உரிய தலைப்புடன் பொருந்தாததைத் தெரிவு செய்க.**

21. இந்து நாகரிகத்தின் தனித்துவமான சிறப்பு.

1) இறை உண்மை, இறை நம்பிக்கை என்பவற்றை ஏற்று வாழுதல்.
2) உலகியலையும் ஆன்மீகத்துறையையும் இணைக்கும் பண்பு.
3) ஆன்மீக முத்தி தத்துவத்தை இலக்காகக் கொண்டது.
4) இறை ஆற்றலை விட மானுட ஆற்றலே மேலானது.
5) வாழ்வியல் தர்மத்தை வாழ்க்கை விதிகளாக எடுத்துக் காட்டியுள்ளமை.

22. பல்லவராட்சியில் வேதாகம மரபுகள்.

1) திருக்கோயில்களின் எழுச்சி.
2) அரண்மனையில் சமயச் சடங்குகள் மேலோங்கின.
3) புராண விருத்தி, பாரத விருத்தி முதலிய மானியங்கள்.
4) பிரமாணக் குடியிருப்புக்களை விரிவுபடுத்தியமை.
5) மன்னர்கள் வேதாகம மரபுகளை பேணியமை.

23. சங்க கால சமய மரபுகள்.

1) ஐவகை நில அமைப்புக்கேற்ப வழிபாடுகள்.
2) பாவை நோன்பு, நடுகல், வெறியாட்டு வழிபாடுகள்.
3) கொற்றவை சக்தி வழிபாட்டில் சங்கமித்தமை.
4) துணங்கைக் கூத்துக்கள், பாணர் இசைகள் காணப்பட்டன.
5) பிராகிருத மொழி பண்பாட்டு மொழியாக விளங்கியமை.

24. மகா புராணங்கள்.

1) திருக்கோயில் வழிபாட்டு முறைகளை எடுத்துரைப்பது.
2) தெய்வங்களின் வரலாறுகளைக் கூறுவது.
3) சைவ, வைணவ, சமண, பௌத்த நெறிகள் பற்றிக் கூறுவது.
4) நண்பர் போல் அறிவுரை வழங்குவது.
5) இந்து இலக்கிய மரபிற்கு அடிப்படையானது.

25. சிந்து வெளிக் காலம்.

1) ஹரப்பா பாகிஸ்தானிலும் மொகஞ்சதரோ மேற்குப் பஞ்சாப்பிலும் உள்ளது.
2) சேர்.ஜோன்.மார்ஷல் தலைமையில் ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டது.
3) முத்திரைகள், இலிங்க வடிவங்கள் அக்கால சிவ வழிபாட்டை அறிய உதவுகின்றன.
4) கலைகளின் வளர்ச்சியை காணலாம்.
5) கி.மு.3250 தொடக்கம் கி.மு 2750 வரையான காலப்பகுதி.

(25x4=100 புள்ளிகள்)

## பகுதி II

❖ **வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களை தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.**

**அறிவுறுத்தல்கள் :-**

- **பகுதி I இலிருந்து இரண்டு வினாக்களையும் பகுதி II இலிருந்து மூன்று வினாக்களையும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.**
- **ஒவ்வொரு வினாவுக்கும் இருபது புள்ளிகள் வழங்கப்படும்.**

## பகுதி I

01. சிந்துவெளிக் காலத்தினை அடிப்படையாகக் கொண்டு மேல்வரும் விடயங்களை விளக்குக.
    அ) வரலாற்று மூலங்கள்
    ஆ) சிவ வழிபாடு
    இ) நுண் கலைகள்
    ஈ) சமுதாய சிந்தனைகள்

(3+5+6+6=20 புள்ளிகள்)

02. இந்துப் பண்பாட்டு மரபில் மகாபாரதம் பெறும் சிறப்பினை மேல்வரும் விடயங்களில் விளக்குக.
    அ) இலக்கிய மரபு
    ஆ) சமய நெறி
    இ) தர்ம சிந்தனைகள்
    ஈ) சமுதாய வழமைகள்

(4+4+6+6=20 புள்ளிகள்)

03. “மகாபுராணங்கள் தென்னாட்டின் கருவூலங்களாகும்” இக் கூற்றினை ஆதாரமாகக் கொண்டு மேல்வரும் தலைப்புக்களில் விளக்குக.
    அ) புராணங்களின் அமைப்பு
    ஆ) வம்ச வரலாறுகள்
    இ) கோயிற் சிற்பங்கள்
    ஈ) பிற்கால செல்வாக்கு

(5+5+5+5=20 புள்ளிகள்)

## பகுதி II

04. பல்லவர் கால சமய நிலைகளைப் பரிசீலனை செய்க.

(20 புள்ளிகள்)

05. நாகரிகம், பண்பாடு என்பவற்றினை விளக்கி இந்து நாகரிகத்தின் சிறப்புக்களை விரிவாகக் கூறுக.

(20 புள்ளிகள்)

06. வேத கால சமய நிலையினை விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)

07. சிவாகமங்கள் கூறும் ஆலயக் கிரியைகளையும் அனுட்டானங்களையும் தத்துவ சிந்தனைகளையும் விளக்குக.

(20 புள்ளிகள்)

08. சோழ அரசும் சைவ நெறியும் என்ற விடயத்தை விளக்கி ஆராய்க.

(20 புள்ளிகள்)